# Dutch Forts in Sri Lanka

A banner exhibition – Text in Tamil (total 13 banners)
Starting on Tuesday 22 March 2022

1) இலங்கையில் ஒல்லாந்தர் கோட்டைகள்

1636ஆம் ஆண்டில் கண்டியரசன் போர்த்துகேயரை இலங்கையில் இருந்து அகற்றுவதற்கு ஒல்லாந்தர் கிழக்கு இந்திய வர்த்தக சங்கமாக (Dutch East India Company) இருந்த வீ.ஓ.ஸி. என்று அழைக்கப்பட்ட அமைப்பின் உதவியை நாடினார். 1658 இல் குறிப்பிட்ட வர்த்தக சங்கத்தின் உதவியைப் பெற்று போர்த்துக்கேயரை அகற்றப்பட்டப் பின்பு போர்த்துகேயரிடம் இருந்து கைப்பற்றிய கடலோர பிரதேசங்களில் இந்த வர்த்தக சங்கத்தால் காலனித்துவ நிர்வாகமொன்றை தாபிக்கப்பட்டது. நாட்டின் உட்புறத்தில் அமைந்திருந்த கண்டி இராசதாணியானது வெளி உலகத்துடன் பொருளாதார ரீதியாக அன்நியப்பட்டவனாக இருந்ததுடன் இரண்டாவது இராஜசிங்க அரசன் தனது சொந்த நாட்டுக்குள்ளே ஒரு சிறைக்கைதியைப் போலானார். கறுவாய், பாக்கு மற்றும் யானைகள் என்பன பிரதானமான இலாபகரமான ஏற்றுமதிகளாகவும் இந்தியாவில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துணிகள் போன்றவை பிரதான இறக்குமதி பொருட்களாகவுங்கொண்டு அமைந்திருந்த வெளிநாட்டு வர்த்தகமானது பலமான வீ.ஓ.ஸி. வர்த்தக சங்கத்தின் கட்டுபாட்டில் இருந்தது. வெளிநாட்டு வர்த்தகத்தால் கண்டி இராசதாணி நன்மையடையவில்லை என்பதுடன் கடலோர சனத்தொகை வலுவாக அதன் பயன்பெற்றது. கடலோர பிரதேசங்களில் அமைக்கப்பட்ட கோட்டைகளின் வரிசையானது வீ.ஓ.ஸி. வர்த்தக சங்கத்திற்கு தனது பிடியை பலமாக தாபித்துக்கொள்ள உதவியது.

## 2) போர்த்துகேயர்களுக்கு எதிரான கூட்டமைப்பு 1638 –1658

ஒல்லாந்தர் கடற்படைத்தளபதி ஜொறிஸ் வான் ஸ்பில்பேஜென் (Joris Van Spilbergen) 1602ஆம் ஆண்டில் நாட்டின் உட்புறத்தில் அமைந்திருந்த கண்டிற்கு வருகை தந்தபோது நாட்டின் கடலோர பிரதேசங்களின் நிர்வாகம் போர்த்துகேயர்களிடம் இருந்தது. தொடக்கத்தில் சீதாவக பிரதேசத்தை இராசதாணியாகக்கொண்டிருந்த இராஜ சிங்க அரசன் கடுமையான போருக்குப் பின்பு போர்த்துகேயர்களின் ஆட்சியில் இருந்த பிரதேசத்தை தனது கட்டுபாட்டின் கீழ் கொண்டு வந்தார். எவ்வாறாயினும் 1593 இல் அரசன் இறந்த பின்பு தென்மேற்கு கடலோர பிரதேசத்தின் ஆட்சி பிருதுகால் அரசிடம் இருந்தது. ஒரு இளவரசனின் ஆட்சிற்கு உட்பட்ட பிரதேசமாக இருந்த யாழ்ப்பாணம் தனது சுயாதீனத்தை அதற்கு சில வருங்களுக்கு முன்பே இழந்தது. மலையகத்து அரசனாக இருந்த விமலதர்மசூரியன் முழுமையாகவே தனித்தவன் என்ற நிலைக்கு தள்ளப்பட்டார். அவருக்கு பின்பு அரசனாகிய “சீதாவக பிரதேசத்தின் சிங்கம்” என்று பிரபல்யமடைந்த இரண்டாவது இராஜசிங்க அரசன் 1638இல் வீ.ஓ.ஸீ. வர்த்தக சங்கத்துடன் ஒரு கூட்டணியை உருவாக்கிக்கொண்டார். அது கைப்பற்றிக்கொண்ட பிரதேசத்தை தன்னிடம் ஒப்படைக்கப்படும் என்ற நம்பிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆனாலும் இலாபகரமான கறுவாப் பயிர்செய்கையை தன்னிடம் வைத்துக்கொள்வதற்காக வீ.ஓ.ஸி. வர்த்தக நிறுவனம் அப்பிரதேசத்தை அவ்வாறு ஒப்படைப்பதை நிராகரித்தது. மட்டக்களப்பை 1638இலும் திருகோணமலையை 1639இலும் கைப்பற்றிக்கொண்டதன் பிறகு இலாபகரமான தென்மேற்கு கடலோர பிரதேசத்தை கைப்பற்றிக்கொள்ளல் 1640இல் காலியும் 1644இல் நீர்கொழும்பையும் வெற்றிக்கரமாக கைப்பற்றிக்கொண்டது. அதன் பிறகு மேற்கொள்ளப்பட்ட தற்கலிகமான போர் நிறுத்தத்திற்குப் பின்பு 1656இல் கொழும்பையும் 1658இல் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றிக்கொண்டது.

## 3) பல கோட்டைகளுடன் கைப்பற்றிக்கொண்ட ஒரு கடலோரப் பிரதேசம்.

அப்போதைய இலங்கையின் ஆளுநராக இருந்த ஜெராட் ஜொஆன் வ்றீலான்ட் (Gerard Joan Vreeland) அவர்களால் இலங்கையில் கட்டியமைக்க திட்டமிடப்பட்டிருந்த 22 கோட்டைகளின் வரைப்படங்களைக்கொண்ட ஒரு இலங்கைத்தேசபடம் 1751 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் 24ஆம் திகதியன்று தனது நெருங்கிய உதவியாளர்களிடம் ஒப்படைத்தார். இந்த சிறப்பான அன்பளிப்பானது வீ.ஓ.ஸி. நிறுவனம் தனது வலுவான பாதுகாப்பு ஆற்றலின் பெயரால் தனது காலனித்துவ ஆதிக்கத்தை எவ்வாறு தொடர்ந்து தக்கவைத்துக்கொள்வது என்பதை உடனடியாக தெளிவுப்படுத்துகின்ற ஒன்றாக இருந்தது. கடற்கரைப் பிரதேசத்தில் கட்டியமைக்கப்படும் கோட்டைகள் பிரதானமாகவே கடற் குடா பிரதேசத்தின் பாதுகாப்பை ஐரோப்பியர்களுக்கு உறுதிபடுத்துவதாக இருந்ததுடன் நாட்டின் உட்புறத்தில் ஏற்படும் எதிர்ப்புகளை முறியடிக்கவும் அது உதவியது. அத்துடன் அது ரோந்து நடிவடிக்கைகளுக்காக சிறந்ததொரு நடவடிக்கை தளத்தை வழங்கியது. அத்துடன் இது பிரதேசத்தின் மக்களை கட்டுப்படுத்துவதற்கும் தேவையானபோது அழைக்கப்பட்டது. பலமான கோட்டைகளானது கண்டி அரசன் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதை தடுக்கும் என்பது வீ.ஓ.ஸீ. நிறுவனத்தின் இயல்பான எதிர்பார்ப்பாக இருந்தது. வீ.ஓ.ஸீ. நிறுவனத்தின் ஆட்சிப் பிரதேசத்தில் 1761 இல் தொடங்கிய போர் 1766 வரை நீடித்தது.

## 4) கட்டியமைத்தலும் பராமரித்தலும்

1602 வரை போர்த்துகேயர்களுக்கு ஏனையய ஐரோப்பியர்களுடன் போட்டியிட வேண்டும் என்ற அச்சம் இருக்கவில்லை. எனவே கொழும்பில் இருந்ததை தவிர ஏனைய இடங்களில் இருந்த போர்த்துகேயர் கோட்டைகள் மிகவும் எளிமையானவையாக இருந்தன. 1658 இல் போர்த்துகேயர்களை அகற்றிய பின்பு வீ.ஓ.ஸீ. நிறுவனம் போர்த்துகேயர்களிடம் இருந்து கைப்பற்றிக்கொண்ட கோட்டைகளை நவீன போர்த் தேவைகளை பூர்த்திச்செய்துக்கொள்ளவும் வீ.ஓ.ஸீ. நிறுவனத்தின் இராணுவ பலத்தை அதிகரித்துக்கொள்ளவும் மேலும் நீவீனப்படுத்தப்பட வேண்டியத் தேவை இருந்தன.

சில வருடங்களுக்குப் பிறகு ஆளுநராகிய தந்தையும் மகனுமான றிஜ்க்லொவ் வான் கொயனெஸ் (Rijcklof Van Goens) போர்த்துகேயர்களிடம் இருந்து அவற்றினை மறுபடியும் கைப்பற்றிக்கொள்ள முயற்சித்தார்கள். ஆயினும் 1680இல் உத்தியோகபூர்வமற்ற தற்காலிக போர் நிறுத்ததிற்குப் பின்பும் வீ.ஓ.ஸீ. நிறுவனம் தன்னால் கைப்பற்றிக்கொண்ட பிரதேசங்களின் உட்புறத்திலுள்ள சில கோட்டைகளை வைத்துக்கொள்ள தீர்மானித்தது. எவ்வாறாயினும் கடலோர பிரதேசங்களில் அமைந்துள்ள கோட்டைகளை பராமரித்க்கொள்ள கடும் கரிசனை தேவையாக இருந்தது. அதற்கு மேலதிகமாக இந்த படங்களானது இந்தியாவில் இருந்தோ அல்லது இந்தோனேசியாவில் இருந்தோ கொண்டுவரப்பட்ட அடிமைகளையோ அல்லது பலாத்காரமாக உழைப்பை வாங்கப்பட்டவர்களான உள்ளூர் மக்களோ ஆற்றிய பங்களிப்பை காட்டுவதில்லை.

## 5) நிர்வாகமும் காலனித்துவத்தின் சுரண்டலும்

ஒல்லாந்தர் கீழைத்தேய இந்திய வர்த்தக நிறுவனமான வீ.ஓ.ஸீ. (VOC) மலையக இராசதானியின் அரசனுடைய பிரதிநிதிப்போல போர்த்துகேயர்களிடம் இருந்து கைப்பற்றிக்கொண்ட பிரதேசங்களை நிர்வகித்தது. கீர்த்தி சிறி இராஜசிங்க அரசனுடன் மேற்கொள்ளப்பட்ட போருக்குப் பின்பு (1761-1765) வீ.ஓ.ஸி. நிறுவனம் இப்பிரதேசங்களை நிர்வகிக்கும் உரிமையை தனக்கு உள்ளதாக கருதினாலும் மலையகத்து அரசு அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. கைப்பற்றிக்கொண்ட பிரதேசத்தை வீ.ஓ.ஸி. கொம்பனியால் கொமாண்டரிகள் (comandments) என்று நிர்வாக பிரிவுகளாக பிரித்தது. இதன்படி கொழும்பு கொமாண்டரியானது சிறிது காலம் மத்தியின் நிர்வாகத்தின் கீழ் இருந்ததுடன் யாழ்ப்பாணம் மற்றும் காலி என்ற கொமாண்டரிகள் 1796 வரை மத்தியின் கீழ் இருந்தன. பிரதேச மக்களுக்கு தங்களுடைய நிர்வாகிகளைக்கொண்டு அவற்றினை தேவைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது. நிர்வாகத்தின் மேல் மட்டம் வீ.ஓ.ஸீ. நிறுவனத்தின் உத்தியொகத்தர்களால் மட்டுமே அமைந்தருந்தது. கிராமிய பிரதேசங்களில் நிர்வாக அலகு திசாவனி (dessavony) அல்லது கோரலே (korale) என்று புராதன இலங்கை முறைமைக்குப் பின்பு பெயரிட்டப்பட்டது. சுதெசிய மக்களின் வாழ்க்கையின் மீது வீஓ.ஸி. நிறுவனத்தின் விருப்பங்கள் கடுமையான செல்வாக்கை செலுத்தியதுடன் சுதேசிய மக்களின் உழைப்பை சுரண்டல் என்பது உச்சக்கட்டத்தில் அமுலில் இருந்தது.

## 6) போர் படைப்பிரிவுகளும் சோதனைசாவடிகளும்

இலங்கையின் கோட்டைகளின் கான்பியக்பொருட்களை (visual materials) இரண்டு வகையாக பிரிக்கலாம். ஒருவகையானது ஓவியங்கள், நீர் வர்ண மற்றும் அச்சடிக்கப்பட்டவை என்றவை கொண்டுள்ளது. இரண்டாவது வகையானது ஓரளவுக்கு தொழில்சார் நுட்பங்களைக்கொண்ட நில வரைவுகள், வரைப்படங்கள், உருவத்தோற்றங்கள் என்பனவற்றினைக்கொண்டுள்ளது. முதலாம் வகையை சார்ந்தவையானது பெரும்பாலும் மேல் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட ஒப்படைப்புகளின் காரணமாக இராணுவ பொறியியலாளர்களால் அல்லது அளவைவியலாளர்களால் மேற்கொள்ளப்பட்டவையாக இருந்தாலும் அவை இராணுவ ரீதியான நோக்கங்களையற்றவை என்பதை காட்டுகின்றன.

சிலநேரம் இந்த சோதனைச்சாவடிகளில் பாதுகாப்பு கடமையில் இருந்த சிப்பாய் ஒருவர் வெடிவைப்பதற்காக துளைவுகளில் இருந்து முன்னோக்கி தள்ளியதாக அமைக்கப்பட்டுள்ளமை காணக்கூடியதாக உள்ளது. தொழில்சார் நுட்பங்களைக்கொண்ட வரைப்படங்களானது மிகவும் தெளிவாக துப்பாக்கிகள் பாதுகாப்பு அரண்களின் பலவிதமான படைப்பிரிவுகளை எவ்வாறு இலக்குகளாகக்கொண்டுள்ளன என்பதை காட்டுகின்றன. அதேபோல இந்த வரைப்படங்கள் தெளிவாகவே அரண்கள், களஞ்சியங்கள், நிலத்தடி வெடி மருந்து அறைகள், மழைநீர் சேகரிப்பு நிலத்தடி தாங்கிகள், பலவிதமான உத்தியோகஸ்தர்கிளன் இல்லங்கள் போலவே ஒரு சிறையறைப் பற்றியும் தெளிவான காட்சிகளை வழங்குகின்றன.

## 1) காலி – யுனெஸ்கோ உலக மரபுரிமை தளம்.

கோட்டை மதில்சுவர்களாலான காலி நகரம் *1983* ஆம் ஆண்டில் உலக மரபுரிமைத்தளம் என்ற அந்தஸ்தைப் பெற்றது. இந்த ஏற்றுக்கொள்ளலானது கிட்டத்தட்ட நானூறு வருட காலமாக நிலவிய காலனித்துவ காலப்பிரிவின் நினைவுக்கூறல் மரபுரிமையின் (monumental heritage) வரலாற்று ரீதியான முக்கியத்தவத்தை சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டமையும் அத்துடன் அதன் பாதுகாத்தலின் அவசியத்தையும் காட்டுகின்றது. பல சீர்திருத்த செயல்திட்டங்களை மேற்கொண்டுள்ள இது தற்போது சுற்றுலாப் பயணிகளின் மிகவும் விருப்பத்திற்குரிய இடமாக உள்ளது. காலனித்துவ ஒல்லாந்தர் காலம் மற்றும் பிரித்தானிய காலம் என்ற இரண்டிற்கும் உரிய கட்டடகக்கலைம்சங்களை வெளிப்படுத்தும் கலப்பு பாணியைக்கொண்டதாக இந்த சீர்திரத்தங்களை மேற்கொள்ளப்பட்டுள்ளன. கோட்டை மதில் சுவர்கள் மற்றும் பாதுகாப்பு அரணகள் சிறப்பானதாக பாதுகாக்கப்பட்டவையாக இருந்தாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டிலும் சில மாற்றங்களை மேற்கொண்டுள்ளமையும் புதிதாக சிலதை சேர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும் சூரியன், சந்திரன், நட்சத்திர பாதுகாப்பு அரண்கள் என்பன இப்பொழுதும் ஒல்லாந்தர் காலத்தில் போலவே மனக்கவருகின்றதாக உள்ளன.

## 8) மாத்தறை: கறுவாவும் யானைகளும்

கடலில் இருந்து ஆறுவரை செல்கின்ற ஒரு எளிமையான சுவரால் மாத்தறை நகரம் பாதுகாக்கப்படுகின்றது. *1761* ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் தொடக்கத்தில் ஒல்லாந்தர் ஆட்சிப் பிரதேசத்தில் வாழ்ந்த கிளர்ச்சியாளர்கள் கண்டி அரசனின் படைகளின் ஒத்துழைப்புடன் மேற்கொண்ட சுதந்திரப் போராட்டத்தின்போது கிளர்ச்சியாளர்கள் இந்த சிறிய கோட்டையை சுற்றிவளைத்தார்கள். இனிமேலும் கோட்டையை பாதுகாத்துக்கொள்ள முடியாத கட்டத்தில் ஒல்லாந்தர்கள் பின்வாங்கிக்கொண்டு கடல் வழியாக சென்றபோது கோட்டைக்கு தீவைத்துவிட்டே சென்றார்கள்.

*1762* இல் அதனை மறுபடியும் கைப்பற்றிக்கொண்ட பின்பு வீ.ஓ.ஸீ. நிறுவனம் கோட்டையை மீள் கட்டத் தொடங்கியது. சீர்திருத்த கிறிஸ்தவ சபையின் நினைவுச் சின்னம் (memorial sign of the Reformed Church) "*1767*" என்று இதற்கு சாட்சியாக காட்சிதருகின்றது. இந்த கோட்டையின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தும் நோக்கில் நட்சத்திர வடிவத்தைக்கொண்ட ஒரு பரிவார முகாம் (redoute) மாத்தறைக்கு வெளிப்புறத்தில் அமைக்கப்பட்டது. இதில் வியாபார நடவடிக்கைகள் மீன்டும் தொடங்கியது. கறுவாப்பட்டை உற்பத்தியை மீண்டும் தொடங்கி காலி வரை அது கொண்டு செல்லப்பட்டது. வருடத்தத்தோறும் இடம்பெறும் யானை ஏலத்திற்காக தென்னிந்தியாவில் இருந்து வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தார்கள். இந்த ஏலத்தில் விற்க காடுகளில் இருந்து பிடிக்கப்பட்ட யானைகளை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுசெல்லும் நீண்ட பயணம் தொடங்கும்வரை யானைகளை மாத்தறையில் கட்டிவைக்கப்பட்டிருந்தன.

## 9) யாழ்ப்பாணம்: வருங்காலத்திற்காக சீரமைக்கப்படுதல்

1658 இல் வீ.ஓ.ஸி. நிறுவனத்தை மக்களால் உற்சாகமாக வரவேற்கப்பட்டமையை யாழ்ப்பாணத்தை கைப்பற்றிக்கொள்ளல் சார்ந்த இந்த அச்சு இயந்திர சித்தரிப்பால் எடுத்துக்காட்டப்படுகின்றது (கீழ்வரும் சித்தரிப்பைப் பார்க்குக). அதேபோல இதனை ஐரோப்பிய திமிர்த்தனத்தின் வெளிப்பாடாகவும் ஒருவகை பிரசாரப்படுத்தலாகவும் காணலாம். ஏனெனில் குறிப்பிட்ட காலத்தில் நாட்டின் உட்புறத்தில் அமைந்திருந்த கண்டி இராசதாணிக்கும் வீ.ஓ.ஸீ. நிறுவனத்திற்கும் இடையிலான தொடர்பானது பிரச்சினைக்குரிய நிலையில் இருந்தது. அத்துடன் உண்மையாகவே அதற்குப் பிறகு அந்த உறவு வளரவும் இல்லை. போட்டியான காலனித்துவ சக்திகளுக்கு, குறிப்பாக பிரித்தானியர்களுக்கு யாழ்ப்பாணம் என்பது உற்சாகமூட்டுகின்றதொன்றாக அமைந்திருந்ததன் காரணமாக "யாழ்ப்பானத்து காவற் கோட்டை" (castle of Jaffna) என்று பொதுவாக அழைக்கப்பட்ட இந்த கோட்டையை பதினெட்டாம் நூற்றாண்டின்போது நவீனமயப்படுத்தப்பட்டது. எனவே இதன்போது எளிதாக பாதிப்படையக்கூடியதாக இருந்த நுழைவு வாயில்களின் முன்பக்கத்தில் அரை முன் தள்ளிய முகப்புகளையும் (half bastions) பாதுகாப்பு அரண்களையும் அமைக்கப்பட்டன. இந்த நுண்மையான பாதுகாப்பு பலப்படுத்தல் அம்சங்கள் காரணமாக யாழ்ப்பாணத்து கோட்டையானது இலங்கையில் ஒல்லாந்தர் கோட்டைகளுக்குள் நிகரற்ற ஒன்றாக மாற்றியது.

இதன் மாபெரும் சீரமைப்பு செயல் திட்டமானது (2009–2012) ஒல்லாந்தர் ஆட்சியின் நிதி அனுசரணையில் மேற்கொள்ளப்பட்டது. இது காலனித்துவ நினைவுச் சின்ன மரபுரிமைப் பற்றிய ஒரு முக்கியமான கருத்தை வழங்குவதாகவும் உள்ளது.

## 10) மன்னார்: வடக்கின் முத்து

மன்னார் கோட்டையும் குடியிருப்பும் அளவைப் பொறுத்தவரை மத்தியத்தரமாக இருந்தாலும் தந்திரோபாய வழியிலும் பொருளாதார ரீதியாகவும் அவை முக்கியமான வகிப்பங்கைக்கொண்டன. வருடத்தோரும் விற்பனைக்காக யானைகளை தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டுசெல்லும் கடலோர பாதையை இந்த கோட்டையால் தனது கட்டுபாட்டில் வைத்துக்கொள்ளப்பட்டது. இந்த பிரதேசத்தில் இருந்து சாய வேர்களை (Oldenlandia umbellate) திரட்டப்பட்டதுடன் அவை இந்திய சிவப்பாக துணிகளை நிறமாக்க பயன்படுத்திக்கொண்டன. இப்பிரதேசமானது முத்துக் குளித்தலுக்கு பிரபல்யமான பிரதேசமாக இருந்தாலும் அது அடிக்கடி நிகழ்ந்ததாக இருக்கவில்லை. தேவையானளவு முத்துக்கள் உருவாகியுள்ளது என்பதை பரிசோதகர்களால் கண்டெடுக்கப்பட்ட பின்பு முத்துக்குளிப்பவர்கள் மன்னாரின் அரிப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள ஒல்லாந்தர் கோட்டையருகில் கூடுவார்கள். அவர்களின் எண்ணிக்கையானது ஆறு என்றதில் தொடங்கியதுடன் பிறகு குறிப்பிடத்தக்களவு கூடியது. அப்போது நூற்றுக்கணக்கான படையினர் கடற்கரையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். அதேபோல கடற்கரையில் தற்காலிக குடில்கள் அதிக எண்ணிக்கையில் அமைக்கப்பட்டன.

## 11) மட்டக்களப்பு: ஒல்லாந்தர்களுடலான முதலாவது சந்திப்பு

1602 இல் ஒல்லாந்தர் கடற்படைத்தளபதி ஜொறிஸ் வான் ஸ்பில்பேர்ஜன் (Joris Van Spilbergen) இலங்கையின் கிழக்கு கடற்கரைப் பிரதேசத்திற்கு விஜயம் செய்தார். முதலாவது விமலதர்மசூரிய அரசன் அவரை உற்சாகத்துடன் வரவேற்றார். போர்த்துகேயர்களை அகற்றும் நடவடிக்கைகளின்போது மிக முக்கிய பங்களிப்பை ஒல்லாந்தர்களால் வழங்க முடியும் என்பதுபோல இருந்தது. அத்துடன் இந்த உற்சாகமான வரவேற்புக்கு காரணமாக ஜொறிஸ் வான் ஸ்பில்பேர்ஜன் என்பவர் ஒல்லாந்தர் தேசத்து இளவரசன் மௌரிஸ்ஸின் (Maurice) ஒரு பிரதிநிதியாவார் என்று எண்ணியமையும் காரணமாக அமைந்தது. இந்த முதலாவது சந்திப்பானது 1605 இல் ஹிஸ்ரொறிகள் ஜேர்னல் (Historical Journal) பயண கட்டுரையால் பிரபல்யமடைந்தது. ஜொறிஸ் வான் ஸ்பில்பேர்ஜன் வருகை தந்து ஒரு வருடத்திற்கு பின்பு முதலாவது வீ.ஓ.ஸீ. கடற்படையின் துணைத் தளபதியாக இருந்த ஸெபால்ட் டி வீர்ட் (Sebald de Weert) என்பவரை ஆசியாவிற்கு அனுப்பியபோது அவர் அரசன் உடன்படிக்கையை மதித்து செயற்படுகிறாரா என்பதை பார்க்க வந்தார். இந்த ஒல்லாந்தவாசியுடைய தவறான நடத்தை காரணமாக குறிப்பிட பணி வெற்றியடையவில்லை. தன்னை அவமதிக்கப்பட்டதாகவும் அச்சுறுத்தப்பட்டதாகவும் கருதிய அரசன் அவருக்கு மரண தண்டணையை வழங்கினார். அதற்குப் முப்பது வருடங்களுக்குப் பின்பு இரண்டாவது இராஜசிங்கம் அரசன் இப்போது பலமாக இருந்த வீ.ஓ.ஸீ.யிடம் போர்த்துகேயர்களுக்கு எதிராக போராட உதவியை நாடினார். தனது திறமையை சோதித்துப் பார்க்கும் ஒரு நடவடிக்கையாக மட்டக்களப்புக் கோட்டையை 1638 இல் கைப்பற்றிக்கொண்டது.

12) **திருகோணமலை: கைப்பற்றலின் விளைவுகள்**

1602 இல் ஜொறிஸ் வான் ஸ்பில்பேஜென் (Joris Van Spilbergen) வருகை தந்தமையானது காலம் பாதகமானதாக மாறிக்கொண்டிருக்கின்றது என்பதற்கான எச்சரிக்கையாக எடுத்துக்கொண்ட போர்த்துகேயர்கள் கொழும்பிபிற்கு வெளியில் கடற்கரைப் பிரதேசங்களில் கோட்டைகளை அமைக்க தொடங்கினார்கள். திருகோணமலையில் இதற்காக மிகவும் பொருத்தமான இடமாக தெரிவு செய்துக்கொண்டது பிரபல்யமான இந்து ஆலயங்களைக்கொண்ட முனைப் பகுதியை ஆகும். 1622 இல் இந்த கோவில்களை இடித்து தரைமட்டமாக்கியுதுடன் அந்த எச்சங்களை கோட்டையை கட்டுவதற்கான கட்டடப் பொருட்களாக பயன்படுத்திக்கொண்டார்கள். 1624 ஆம் ஆண்டு ஆகும் போது "ஆயிரம் தூண் ஆலயமமோ" அல்லது வேறு புனித கட்டடங்களையோ மிஞ்சி இருக்கவில்லை.

இந்த போர்த்துகேயர் கோட்டையை 1639 இல் ஒல்லாந்தர்களால் கைப்பற்றிக்கொண்டாலும் நல்லிணக்கத்தின் குறியீடாக அதனை இரண்டாம் இராஜசிங்க அரசனிடம் கையளிக்கப்பட்டது. வீ.ஓ.ஸீ. நிறுவனத்திற்கும் அரசனுக்கும் இடையிலான கூட்டு முறிவடைந்த பின்பு ஒல்லந்தர்களால் பழைய இந்து ஆலய எச்சங்களைக்கொண்டு 1665இல் ஒரு புதிய கோட்டையை கட்டியமைத்தார்கள். இந்த மலையில் இருந்த புனித தளத்திற்கு மக்கள் செல்வதை ஒல்லாந்தர்களால் தடுக்கப்பட்டது. அதேபோல ஒல்லாந்தர்களும் போர்த்துகேயர்கள் போலவே தமது ஐரோப்பிய குடியிருப்புகளின் அருகில் எந்தொவொரு சமய வெளிபாட்டினையும் மேற்கொள்வதை தடுத்தார்கள்.

13) **கொழும்புக் கோட்டை: மறைமுகமாக அழிக்கப்படுதல் 1869–1871.**

1656 இல் கொழும்பை கைப்பற்றியப் பின்பு ஒல்லாந்தர்கள் ஒரு விடயம் புரிந்துக்கொண்டார்கள். அது போர்த்துகேயர் கோட்டைகளின் முழு பிரதேசமும் சரியாக பாதுகாத்துக்கொள்ளல் என்பது மிகவும் கடினமான ஒரு காரியம் என்பதே ஆகும். எனவே அவர்கள் "காவற்கோட்டை" (castle) என்று அழைக்கப்பட்ட கோட்டைகளின் முதன்மையான பகுதியையும் குடியிருப்பு பகுதியையும் பிரிக்க முடிவு செய்தார்கள். கண்டி இராசதாணியுடலான போர் காரணமாக (1665–1675) "பழைய நகரத்தின்" மதில்சுவர்களை இடிக்கப்படுவதை பதினேழாம் நூற்றாண்டின் இறுதிவரை ஒத்திவைக்கப்பட்டது. எழுபது வருடங்களுக்குப் பின்பு பிரித்தானியர்களால் சீரழிந்துப்போன கோட்டையின் மதில் சுவருகளை சீரமைக்கும் ஒரு நவீன போர் நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டது. அதன் காரணமாக 1869 ஆம் ஆண்டிற்கும் 1871 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் கொழும்பின் பாதுகாப்பு சீர்குழைந்தாலும் முழுமையாகவே இல்லாமல் போகவில்லை.! கோட்டையின் பெயர் இழக்கப்படவில்லை என்பதுடன் தொல்பொருளியலாளர் கிறஷாணி மெண்டிஸ் மேற்கொண்ட விரிவானதொரு ஆய்வின் பலனாக அதில் ஒல்லாந்தர் எச்சங்களை பரவலாக அடையாளங்காண முடிந்தது. எவ்வாறாயினும் அவற்றின் பெரும்பகுதியானது கொழும்பு துறைமுகத்தின் நிலத்தடியிலும் கடற்படை தலைமையகத்திலும் இன்னும் சில அடையமுடியாத இடங்களிலும் உள்ளது.